மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த யோசனை சம்பந்தமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டெப்னி, ஸபானர் எந்த வண்டியிலாவது இல்லை என்றால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : நம்முடைய அரசாங்க பஸ்—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்டேட்மென்ட் வேண்டாம். கேள்வி போடுங்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ப்ரேக் டவுன் ஆகிறபோது பொதுமக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) பேரவைத் துணைத் தலைவர்மீது கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குறித்து

Mr. DEPUTY SPEAKER : I wish to inform the Hon. Members that on 7th December 1972 I have received two resolutions under Rule 52 of the Tamil Nadu Legislative Assembly Rules for the removal of the Deputy Speaker from office, from hon. Members Thiru K. T. K. Thangamani and Thiru A. R. Marimuthu. According to rules necessary action will be taken up in due course.

(3) அமைச்சரின் அறிக்கைகள்

(அ) திருச்சி நிகழ்ச்சிகள் நீதி விசாரணைக்கு விடப்படுவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு, பேரவை விதி 82-இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு அறிக்கைகளை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திருச்சியில் இந்த மாதம் 2, 3, 4 ஆகிய நாட்களில் மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள், போலீசார் ஆகியோரிடையே எழுந்த விரும்பத்தகாத மோதல்களைப்பற்றியும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளைப்பற்றியும் எனக்குக் கிடைத்த தகவல்களை வைத்து 6—12—1972 அன்று இந்த அவையில் சில விபரங்களைக் கூறியிருக்கிறேன். மேலும் நமது சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி முதல்வருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு மேலும் சில விபரங்களைப் பெற்றுள்ளார். திருச்சியில் டிசம்பர், 2, 3, 4 ஆகிய மூன்று நாட்களிலும் நடந்துள்ள அசம்பாவித நிகழ்ச்சிகள் குறித்து நீதி விசாரணை நடைபெறுவதற்கு மாவட்ட நீதிபதி அளவில் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அரசின் சார்பில் அறிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) புயல்-மழையினால் ஏற்பட்டுள்ள சேதங்களும், அரசு மேற்கொண்டுள்ள துயர் தணிப்புப் பணிகளும் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வங்கக் கடலில் 4—12—1972 காலை 8 மணி அளவில், கடலூரில் இருந்து, 370 கிலோ மீட்டர் தென்கிழக்கே புயல் உருவாகி, அது மேலும் வலுப்பெற்று மேற்கு நோக்கி நகர்ந்து, 6—12—1972 காலை சுமார் 5 மணி அளவில் கடலூர் கரையைக் கடந்தது. இதன் காரணமாக சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களின் கடற்கரை ஓரங்களின் பெரு மழையும் சூறாவளிக் காற்றும் ஏற்பட்டது.

இந்தப் பெருமழையின் காரணமாக நுங்கம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் டிசம்பர் திங்கள் 5, 6 ஆகிய தேதிகளில் 33 மணி நேரத்தில் 152 மி.மீ. மழை பெய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் 183 மி.மீ. மழை பதிவு செய்யப்பட்டுள்ளது.

புயலைப்பற்றிய முன்அறிவிப்பு கடற்கரைப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தாழ்வான பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் கொடுக்கப்பட்டு அவர்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கைச் செய்யப்பட்டார்கள்.

சென்னை :

இந்த புயல்காற்றினாலும் மழையினாலும் வட சென்னையிலும், தென் சென்னையிலும் கீழ்க்கண்ட தாழ்வான பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் ;—

வட சென்னை—

1. இராயபுரம்.
2. கொருக்குப்பேட்டை.